தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[ Impact Factor: 8.47 ] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 09, June - 2025

DOIs: https://doi.org/10.63300/tmXXXXXXXXXX --:-- Research Paper

# 'Aazhi Soozh Ulagu' from the Perspective of Cultural Ecology

[1] **M. Dhanalakshmi** M.A., M.Phil., M.Ed., [2] **Dr. K. Mahalakshmi** M.A., M.Phil., NET., Ph.D.,
[1] PhD Research Scholar (Part Time), Department of Tamil, Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore - 49
[2] Guide & Assistant Professor, Department of Tamil, Dr. S.N.S. Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore – 49

***Abstract:*** *Ecology is a scientific study that includes the distribution of life and the scientific methods concerning the relationship between organisms and their natural environment. The wise people of the Sangam period lived a life integrated with nature. This activity had an impact on cultural ecologies. Thinais and their cultures are defined by uniquely identifying specific landscapes named after them, based on their associated characteristics such as climate, fauna, flora, food items, occupations, religious beliefs, and emotional tendencies specific to that region. Unshakeable beliefs held in family, community, occupation, festivals, worships, rituals, and social life, along with customs and practices based on those beliefs, constitute the general life beliefs of the people. Based on this, this article aims to examine the cultural ecology of the Neithal land people through 'Aazhi Soozh Ulagu', a novel by Jo. D. Cruz, focusing on the distinctive aspects of the Parathavar people's way of life as cultural norms.*

***Key Words:*** *Neithal land, Culture, Sea, Parathavar, Ecology, Belief, Ritual, Tradition/Custom, Way of life, Environment.*

# பண்பாட்டுச் சூழலியல் நோக்கில் 'ஆழி சூழ் உலகு'

[1] **ம.தனலட்சுமி,** [2] முனைவர் **கோ.மகாலட்சுமி**
[1] முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) தமிழ்த்துறை, டாக்டர்.எஸ்.என்.எஸ். ராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை -49
[2] நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர்.எஸ்.என்.எஸ். ராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை - 49

***Abstract:*** *சூழலியல் என்பது உயிர் வாழ்க்கையின் பரவல் பற்றியும் உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கை சூழலுக்கும் இடையிலான அறிவியல் அடிப்படையிலான ஆய்வு முறைகளை உள்ளடக்கியதாகும். இயற்கையோடு எழுந்த வாழ்வை சங்க சான்றோர்கள் மேற்கொண்டனர். இச்செயல்பாடு பண்பாட்டுச் சூழலிகளில் தாக்கத்தை ஏற்படுத்திற்று. குறிப்பிட்ட நிலங்களுக்குரிய காலச்சூழல், விலங்கினங்கள், பறவைகள், தாவரவகைகள், உணவுப்பொருட்கள், தொழில்கள், மக்களின் தெய்வ நம்பிக்கைகள் மற்றும் மனம் சார்ந்த உணர்வு போக்குகள் போன்றவற்றை அவ்வட்டாரத்தோடு பொருத்தி, அதற்கென்று ஒரு பெயரிட்டுத் தனித்து அடையாளப்படுத்துவதே திணைகளும், அவற்றின் பண்பாடுகளும் ஆகும். குடும்பம், இனம், தொழில், விழாக்கள், வழிபாடுகள், சடங்குகள் மற்றும் சமூக வாழ்வியலில் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைகளும், அந்நம்பிக்கைகள் வழிபட்ட பழக்க வழக்கங்களும் மக்களின் பொதுவாழ்வியல் நம்பிக்கைகளாக அமைந்திருக்கின்றன. இவ்வடிப்படையில் பண்பாட்டு நெறிகளாக நெய்தல் நில மக்களின் பண்பாட்டுச் சூழலியலை ஜோ.டி.குரூஸ் "ஆழி சூழ் உலகு" எனும் புதினத்தின் வழி இடம்பெறும் பரதவ மக்களின் வாழ்வியற் தனித்தன்மைகளையும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.*

***குறிப்பு சொற்கள்*** *: நெய்தல் நிலம், பண்பாடு, கடல், பரதவர், சூழல், நம்பிக்கை, சடங்கு, சம்பிரதாயம், வாழ்வியல்,சூழல்.*

**முன்னுரை:**

சங்ககால மக்களின் வாழ்வியலை உற்றுநோக்குகையில், அக்காலமக்கள் தங்களது வாழ்க்கைத் தளங்களை ஐவகை நிலங்களாகப் பாகுபாடு செய்து கொண்டு, அந்தந்த நிலங்களின் பின்புலங்களுக்குத் தக்கவாறு தங்களது வாழ்க்கை முறைகளையும் தொழில்களையும் அமைத்துக்கொண்டு வாழ்ந்துள்ளனர். இயற்கைச் சூழலியலைப் பல படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் பதிவு செய்திருப்பினும், மண்ணையும் மக்களையும் பதிவு செய்யும் இலக்கியங்கள் மிகக்குறைவே. ஐவகை நிலங்களின் பண்பாட்டுச் சூழலை அந்நிலம் சார்ந்து வாழும் மக்கள் பிரதிபலிப்பார்கள். சங்ககால மக்கள் பண்பாடு என்னும் பொதுவான கூறுகளைப் பெற்றிருப்பினும், ஒவ்வொரு நிலமக்களும், தங்களுக்கென்று தனித்தன்மைகள் கொண்ட வாழ்வியல் நெறிமுறைகளையும், பண்பாட்டுச் சூழலியலையும் கொண்டு விளங்குதலை இக்கட்டுரை முன்வைத்து, ஜோ.டி.குரூஸ் "ஆழி சூழ் உலகு" எனும் புதினத்தில் இடம்பெறும் நெய்தல் நிலச் சூழலியலையும், நெய்தல் நிலத்தவர்களாகிய பரதவர் மக்களின் பண்பாட்டையும் அவர்களின் நம்பிக்கைகள், விருந்தோம்பல், தொழில் சார் சூழல்கள், நிமித்தம் பார்த்தல் போன்றவற்றை விளக்கமாக இக்கட்டுரை ஆராய்கிறது.

**பண்பாட்டியல்**

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஓரினத்தின் இனவரைவியலுக்கான அடையாளத்தைத் தருபவையாகும். அவர்களின் தனித்த அடையாளத்தை சுட்டிக்காட்டுவதற்கு அவ்வினத்தின் பண்பாட்டுக் கூறுகள் குறியீடுகளாக அமைகின்றன. "ஆழி சூழ் உலகு" புதினத்தில் ஐவகை நிலங்களில் ஒன்றான நெய்தல் நில மக்கள் அவர்களுக்கென்ற தனித்த வாழ்க்கை முறையையும், பண்பாட்டு அடையாளங்களையும் கொண்டவர்களாக உள்ளனர். இப்புதினம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடற்கரை நகர மாந்தர்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றது. அவர்களின் கடல் வாழ்வும், மேட்டுநில மக்களோடு கூடிய நட்பு நிலையும் அதைச் சார்ந்த பொருளாதார உற்பத்தியும் விளைபொருளான மீன், உப்பை விற்றல் மூலம் கொண்ட அணுகுமுறையும் இப்புதினத்தின் வழி வெளிப்படுகிறது.

**சூழலியல்**

சூழல் குறித்து ஆராய்கின்ற துறைக்கு சூழலியல் என்று பெயர். இதனை ஆங்கிலத்தில் Environment அல்லது Ecology என்று அழைப்பர். இதனை, "உலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் உறவுகளையும் அவற்றின் சூழலையும் ஆராயும் அறிவியலின் பெயர் சூழலியல்" -(முனைவர் தேவிரா (இராசேந்திரன்) - தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், ப.எண்:378) என்கிறார். பெருமணல் உலகம், கடலும் கடல் சார்ந்ததும் என்றெல்லாம் அழைக்கப்படும் நெய்தல் நிலத்தின் சூழலை உள்ளது உள்ளவாறு ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். வருணனைகள், உவமை, உருவகம் போன்ற உத்திகளுக்கு முக்கியத்துவம் தராமல் ஆவணப்படுத்தும் நோக்கில் படைப்பாளர் இப்புதினத்தை வடிவமைத்துள்ளார். அழகியல் தன்மையும் சில இடங்களில் மின்னல் போல் வந்து சென்றுள்ளது.இப்புதினத்திலும் கற்பனைகளைக் காட்டிலும் உண்மைத் தன்மையே மிகுதியாய் எடுத்தளாப்பட்டுள்ளது.

**இயற்கைச்சூழல்**

நிலத்தின் உச்சிப் பகுதிகள் மழை நீரை தேக்கி வைத்துப் பின் அந்த நீர் கசிந்து அங்கு உள்ள சுனைகள் நிறைகின்றன, சுனைகளில் உள்ள நீர் சேர்ந்து அருவியாக வீழ்ந்து, காட்டாறாக பெருக்கெடுத்து ஓடுகின்றன என்று ஆறுகள் உருவாகும் காட்சியை,

"சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்க,
பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப,

கல் அலைத்து இழிதரும் கடு வரற் கான் யாற்றுக்
கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்ப,
தழங்கு குரல் ஏறொடு முழங்கி,
வானம் இன்னே பெய்ய மின்னுமால்- தோழி!" (நற்-7)

எனும் நற்றிணை பாடல் எடுத்துக்காட்டுகிறது. இதனையே வேள்பாரி புதினத்தில் புதினா ஆசிரியர் பின்வருமாறு இயற்கையின் நுட்பத்தை மிக அழகாக காட்சிப்படுத்தியுள்ளார்.இதனை,

"திரும்பிய திக்கெல்லாம் நீர்ப்பரப்பு, சூரியன் தொடுவானில் கதிர் மடக்கி மறைகிறது. தூரத்தே செக்கர் வானின் கீழ் முறித்துக் கிடக்கும் கடல். மிதமாய் வீசிய வாடைக் கொண்டல், அருகே பச்சையாகவும், தூரத்தே கருநீலமாகவும் தெரிந்த கடலைப் பார்க்கையில் உலகம் அமைதி நிறைந்ததாக மனம் நினைக்கிறது"- ("ஆழி சூழ் உலகு" - ஜோ.டி.குரூஸ்,ப.எண்: 23)

எனும் வரிகளில் ஆசிரியர் இயற்கையின் மகத்துவத்தை நமக்குப் புலப்படுத்துகின்றார். உயிருக்கு உத்தரவாதமற்ற தொழிலை மேற்கொள்ளும் விளிம்புநிலை மக்களான நெய்தல் நிலத்தவர்கள் அடையும் பேரிடர்களுக்கு நடுவில் இயற்கையான பஞ்சபூதங்களையும் காத்து இரட்சிப்பது என்பது திணை மக்கள் அவர்களது பண்பாட்டை உயர்வாகக் கருதுகின்றனர் என்பது நமக்குத் தெளிவாகிறது.

**நெய்தல் நில மக்கள் வாழ்வியல் சூழல்**

கடலும் கடலைச் சார்ந்தும் அமைவது நெய்தல் திணை வாழ்க்கை. ஐந்திணைச் சுட்டும் தொல்காப்பியர்.

"நடுவண்ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே"
(தொல், பொருள், அகத்-2)

இதில் நடுவண் திணையாகிய பாலை நீங்கலாக எஞ்சிய திணைகள் அனைத்தும் கடலால் சூழப்பட்ட உலகம் என்பதன் வழி, உலகின் அதிகப் பரப்பளவினைக் கொண்டது நெய்தல் திணை என்பது புலனாகிறது. இதனையே "ஆழி சூழ் உலகு" எனும் புதினம் வழி மீனவர்களின் வாழ்வியலைக் காட்சிப்படுத்துகிறது. அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்காகவும், முதன்மைத் தொழில்களாகிய மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்றவற்றிலும் அதன் சார்பு தொழில்களான பண்டமாற்றுதல், வணிகம் செய்தல் போன்றவற்றிலும் நெய்தல் திணை மக்கள் எதிர்கொண்ட இடர்பாடுகள் மிகுதியாக இப் புதினம் எடுத்துரைக்கிறது. கடற்தொழிலை மேற்கொள்பவருக்கு பெருத்த இடையூறாக இருப்பது கடல் சீற்றமாகும். கடல் சீற்றங்கொண்டு அலைகள் விரைந்தடிக்கும் காலங்களில் கடலில் படகுகளைச் செலுத்த வாய்ப்பின்றி, தொழிற்பட முடியாத சூழல் ஏற்படுவதை இப் புதினம்

"எய்யா, இப்ப எங்க கெடக்கோம்னு வேற தெரியில்லியே, பெரியவரு வேற பேச்சு முச்சில்லாம கெடக்கார" என்றார் சூசையார். மாமா, உசுரோட ஊரு போயி சேருவோமா! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை சூசையாரால். அடுத்த வினாடியை எதிர்கொள்வதே மிகப்பெரிய சவாலாகி விட்ட நிலையில், ஊர் போய் சேருவதென்பது மனித பலத்தில் ஆகக்கூடியது அல்ல என்பது அவருக்குத் தெள்ளத்தெளிவாக தெரிந்தது"

-("ஆழி சூழ் உலகு" - ஜோ.டி.குரூஸ்,ப.எண்: 129)

எனும் வரிகளில் பரதவர் அனுதினமும் கடலில் எதிர்கொள்ளும் மரணப் போராட்டத்தை விளக்குகிறது. விடியற்காலையில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று "எற்பாடு" என்று வழங்கப்படுகிற மாலையில் கரைந்திரும்புதல் மீனவத் தொழிலின் இயல்பாகும். ஆயினும், தொழில்நிமித்தம் காரணமாக அலைகள் வீசுகின்ற கடலிலே. இரவிலே. திமிலில் கட்டிய விளக்கொளியைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் பரதவர்களின் இடர்பாடு மிகுந்த வாழ்க்கையை அகநானூறு,

"கொண்டல் இரவின் இருங்கடன் மடுத்த
கொழுமீன் கொள்பவர்
இருள்நீங்குஒண்சுடர்"

- (, 100:6-7)

"நளிகடல் திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்"

(,240:5)

எனும் வரிகள் உணர்த்துகின்றன. பரதவர் தொழிற்படு சூழலில் இயற்கையோடு மட்டுமல்லாது கடல்வாழ் உயிரினங்களாலும், பலவிதமான ஆபத்துகளைச் சந்திக்க நேரிடுகிறது. கூர்மையான கொம்புகளையுடைய வேட்டை சுறாக்கள் திரிகின்ற கடற்பரப்பில் தம் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் நெய்தல் நில மக்கள் இருக்கின்றனர் என்பதை இப்புதினம் உணர்த்துகின்றது. இதனை, கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்"

- (,170:12)

என்று கூறுகிறது. இவ்வகையான கொடிய சுறாக்கள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் பாதவர்களுடைய வலைகளைத் தம் கூரிய கோடுகளால் கிழித்து அழித்துவிடுகின்றன. அவ்வாறு கிழித்து வீணடிக்கப்பட்டு, தொழிருக்குப் பயன்படாது போன வலைகள் பரதவரின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள தாழைகளின் மேல் கிடக்கின்றன. இதனால் தொழில் முடக்கமும், பொருளாதார நட்டமும் ஏற்பட்டதை "ஆழி சூழ் உலகு" நாவல் விளக்குகிறது. மேலும் இந்நாவல் கடற்பரப்பில் ஆபத்தை விளைவிக்கும் சுறாக்கூட்டத்தை நீக்கி, அவற்றின் கண்களில் படாமல் நீரில் மூழ்கி, வலம்புரிச்சங்கினை எடுத்துவரும் மிக ஆபத்தான தொழிலிலும் பரதவர்கள் ஈடுபடுகின்றனர் என்பதை ஆசிரியர் கூறிய விதம் படிப்போர் கண்களை கலங்க வைக்கிறது எனலாம்.

**நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகள்**

மனிதன் இன்ப துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவே நம்பிக்கைகளை உருவாக்குகின்றான். இந்த நம்பிக்கைகள் காலகாலமாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மாறுகின்றன. பண்பாட்டிலும், அறிவிலும் சிறந்து விளங்கிய நெயல்தல் நில சமுதாயத்திலும் பலவகையான நம்பிக்கைகள் காணப்படுவதாக "ஆழி சூழ் உலகு" நாவல் பல இடங்களில் நிரூபிக்கிறது. நெய்தல் நில மக்கள் வருணனை நிலத் தெய்வமாக வழிபட்டனர். கடலில் கிடைக்கும் பொருட்களை வைத்தே வழிபாட்டு முறைகளை நடத்தினர். சுறாமீனின் கொம்பினை மணலில் நட்டு வைத்து வழிபட்ட முறையை நாவல் கூறுகிறது. கடலில் கிடைக்கும் அரியப் பொருள்களில் சங்கும் ஒன்று. நாவலில் பரதவர்கள் வலம்புரி ஈன்ற முத்துக்களைப் பங்கிட்டுக் கொள்வதும் அவற்றை விற்பதும் போல, இவ்விரண்டையும் தம் விருப்பத் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் போது நேர்த்திக்கடனாக வைத்தனர். நிமித்தம் பற்றிய நம்பிக்கைகள் பற்றி விரிவாக இந்நாவல் பேசுகிறது. பறவைகளையும், சில விலங்குகளையும் நன்னிமித்தமாகக் கொள்வதும் பண்டைய மக்களிடம் வழக்கத்தில்

இருந்ததை சங்கப்பாடல்களில் காணலாம். அதுபோல் நெய்தல் நில மக்கள் சந்திரனுக்குப் பக்கத்தில் தோன்றும் நட்சத்திரத்தை வெள்ளி என்று அழைத்தனர். இந்நட்சத்திரம் தென்பட்டால் நன்னிமித்தம் என்று நம்பிக்கைக் கொண்டனர். அதுவே இந்நட்சத்திரம் சந்திரனுக்குத் தென்திசையில் தோன்றினால் தீநிமித்தம் என எண்ணினர். இதே கருத்து பட்டினப்பாலையிலும் இடம்பெறுவதை,

"வசையில் புகழ்வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்"
-(பட்டி, 1-2)

என்னும் தொடர் மூலம் நாம் அறியலாம். அதிகாலையில் கண்ட கனவு பலிக்கும் என்ற நம்பிக்கையும், "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று ஊழ் பற்றிய நம்பிக்கையும், உயிர்கள் வினைகளுக்கேற்ப பிறவிகள் எடுக்கும் என்ற நம்பிக்கையும், பேய் பிள்ளைகளைப் பறித்துக் கொண்டு சென்றுவிடும் என்ற நம்பிக்கையும் "ஆழி சூழ் உலகு" எனும் புதினம் மூலம் ஜோ.டி.குரூஸ் நெய்தல் நில மக்களிடம் அதிகமாகக் காண்பதாகக் வெளிப்படுத்தியுள்ளார். இதற்குத தக்கச் சான்றாக,

"நாடாக்குடி கோவிலில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. பத்து வருடங்களுக்கு ஒருமுறை முத்தாரம்மன் சிலையை எடத்து சப்பரத்தில் வைத்து கடற்கரைக்குக் கொண்டுவந்து கடல் நீரில் குளிப்பாட்டுவார்கள். காலங்காலமாய் இதை இந்தப் பகுதியைச் சேர்ந்த பரதவர்கள்தான் செய்து வந்தார்கள். இப்போதும் இவர்களுக்குக் கட்டுப்பாடு இருந்தாலும் தப்பித்தவறி யாராவது ஒருவர் உள்ளே சென்றுவிடுவது வழக்கம். இவர்களில் யாராவது சென்று அங்கு கலந்துகொள்ளாவிட்டால் இந்த தெய்வம் அசைந்து கொடுப்பதில்லை என்று பரம்பரை பரம்பரையாக நம்புகிறார்கள்"

("ஆழி சூழ் உலகு" - ஜோ.டி.குரூஸ், ப.எண்: 10)

என்ற கூற்றில் பரதவர்களிடையே நிலவிய கட்டுப்பாட்டையும், நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகளையும் அறியமுடிகிறது. மேலும், கடல்துறைகளில் உடல் தகனம் நடைபெறும் போது அதில் கலந்து கொண்டு வீடு திரும்புவர்கள் கடலில் கால் நனைத்த பின்னரே வீடு திரும்புவார்களாம். ஏனெனில் புனிதமான கடல்நீர் மேலே படும்போது அசுத்த ஆவிகள் விலகி ஓடுமாம். கோவில்களிலும் மந்திரிப்பதற்கு பயன்படுத்தும் தண்ணீரீல் கூட உப்பு கலந்து பின் ஆசிர்வதித்தே குருவானவர் தெளிப்பது வழக்கம். ஏனென்றால் இந்த உப்பு நீர் படும் இடமெல்லாம் எதிரியின் ஆளுமை கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை மேலோங்கிக் காணப்பட்டது. இவையே நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகளில் சிறந்ததாக ஜொ.டி.குருஸ் கூறுகிறார்.

**தொழில் சார் சூழல்**

நெய்தனிலத்துள்ள ஊர்கள் சிறு நல்லூரெனவும், பாக்கமெகவும், பட்டினமெனவும் கூறப்படும். நெய்தனிலத் தலைவன், சேர்ப்பன், புலம்பன், துறைவன் என அழைக்கப்படுவான். நெய்தல் நில மக்கள் பொதுவாக நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர் எனப் பெயர் பெறுவர். பரதவர் திமிலில் சென்று பலவகை மீன்களையும் வலையால் பிடிப்பர். வலையைக் கட்டும் கோலும் அவர்களிடமுண்டு. இராக்காலங்களில் சூழ்கொண்டு சென்று மீன் வேட்டையாடுவர். பெருங்காற்றடிக்கும் சமயங்களிலும் அவர்கள் கடலின் நடுவில் சிக்கவும் வாய்ப்புண்டு. அவர்களுடைய வலையை அடிக்கடி சுறாமீன் கிழிப்பதுண்டு. அவர்களையும் அக்கோட்டு மீன் கிழிக்கும். சுறாமீனை எறியுளியால் கொல்லுவார்கள். எறியுளிபட்ட சில சுறாமீன்கள் சிறிது நேரம் துடிதுடித்துக் கொண்டு கடலைக் கலக்கும். அவற்றிலிருந்து பாயும் இரத்தம் கடல் நீரின் நிறத்தையும் மாற்றி விடுமாம். சுறாமீன் கடற்கரையில் திரியும் கோவேறு கழுதை முதலியவற்றிலும் பாய்ந்து அவற்றையும் காயப்படுத்தும். அவற்றையும்

பரதவர்கள் அடக்குவார்கள். ஆயிலை, இறால் முதலிய பலவகை மீன்களைப் பரதவர் பிடிப்பார்கள். ஆழி சூழ் உலகு புதினத்தில் மீனவர்களின் தொழிலை,

"மீன் வேட்டை முடிந்து வந்தவுடன் தாம் கொண்டு வந்த மீன்களில் பலவற்றை, இரப்போருக்கு அவர்தம் பிச்சைப் பாத்திரம் நிறையக் கொடுக்கும் வண்மையுடையர். இரவலர்க் கீந்தபின் மிகுந்தவற்றைப் பல கூறாக்கி விற்பர். எஞ்சும் மீன்களை வெயிலில் உலர்த்திக் கருவாடாக்குவர். இக்கருவாடு "மீன் தடி" எனக் கூறப்படும்."

("ஆழி சூழ் உலகு" - ஜோ.டி.குரூஸ், ப.எண்: 133)

என்று பெருமையாக ஆசிரியர் கூறுகிறார். மேலும் பரதவர் பிடித்த மீன்களில் மிஞ்சியவற்றை அவர்களது தங்கையர் தெருத்தோறும் கொண்டு சென்று விற்பதும் வழக்கமாக இப்புதினத்தில் கூறப்படுகிறது. உப்பையும் மீனையும் விற்று நெல், தயிர் முதலியன பெறுவர். உப்பின் விலையும், நெல்லின் விலையும் சமமாக இருக்கும். கடலில் மீன் பிடிக்கச் சென்ற பரதவர் வீடு திரும்புவதற்குள், எஞ்சிய மீனை விற்று வரும் நெல்லில் சாதத்தை, அயிலை மீன் கறியுடனும், மீன் தடியுடனும் அவர்களுக்கு பரிமாற வைக்க வேண்டிய சூழலில் பரதப் பெண்கள் இருப்பதாக ஆசிரியர் படைத்துள்ளார்.

**நிமித்தம் பார்த்தல்**

பழந்தமிழ் இலக்கியங்கள் பண்டைய மக்களுடைய வாழ்வின் பல்வேறு கூறுகளையும், பழக்க வழக்கங்களையும் படம் பிடித்துக் காட்டுவன போல் அமைகின்றன. பழந்தமிழரது நம்பிக்கைகள் மிகப் பரந்துபட்டவை. அவற்றுள் ஒன்று சகுனம் அல்லது நிமித்தம் பார்த்தல் ஆகும். இன்றைய உலகம் தேவையற்ற கருத்துக்களையும், பழக்க வழக்கங்களையும் விட்டொழித்து முன்னேறும் விரைவு உலகமாகும். நிலவையும், செங்கதிரையும், இன்ன பிற கோள்களையும் ஆராயும் அறிவியல் உலகமாகும். இருப்பினும் அன்று போல இன்றும் இந்நிமித்தம் பார்க்கும் வழக்கம் பலரிடையே இருப்பதைக் காணலாம். 'நாளும் கோளும் பார்த்தும், நல்லன அல்லன பார்த்தும் செயலாற்றுவது அன்றிருந்தது போலவே இன்றும் உண்டு. உலகில் எங்கும் என்றும் உண்டு"

- (ப.அ.தாயம்மாள், சங்க இலக்கியத்தில் மூடநம்பிக்கை, பக்.எண்: 67)

என்று ப.அ.தாயம்மாள் அவர்கள் தனது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதற்கேற்றார் போல் பரதவ மக்களிடையும் நிறைய நிமித்தங்கள் உள்ளன. பௌர்ணமி தினத்தன்று பருத்த நண்டுகள் கிடைக்கும், ஆடி மாதம் சினையுற்ற மீன்கள் கிடைக்கும், மேகம் கணிவாக இருந்தால் கடல் அலை மிதமாக இருக்கும், பரதவர்கள் படகை எடுக்கையில் பின்னிருந்து யாரேனும் அழைத்தாலோ, குழந்தை அழும் சப்தம் கேட்டாலே அபசகுனம் என்று நினைப்பதாக இப்புதினம் கூறுகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது இல்வாழ்க்கையின் உயிர்நாடியாகும். விருந்தினர் என்பவர்கள் உறவினர்கள் மட்டுமல்லர். புதியவர், முன்பின் அறியாதவர். ஏழைகள், ஊர்விட்டு ஊர்வந்தவர்கள் போன்றோரும் விருந்தினர் என்படுவர். விருந்தோம்பலின் சிறப்பினை உணர்ந்த பண்டைத் தமிழர்கள் தங்கள் இல்வாழ்க்கைக் கடமைகளுள் விருந்தோம்பலை இன்றியமையாத, ஒரு பண்பாகக் கொண்டிருந்தனர். நெய்தல் நிலத்தில் இப்பண்பு சற்று உயர்வாகவே பரதவர்களிடையில் காணப்படுகிறது எனலாம். ஏனெனில் அவர்கள் அசைவ விருந்துகளை பல்வகை மீன்களுடன் பரிமாறுகின்றனர். குத்தப்படாத கொழியல் அரிசியைக் கூழாகக் கிண்டி அதனை ஆறவைத்து அதனுடன் நெல்லை இடித்துக் கலந்து இரண்டு நாட்கள் கழித்து வேகவைத்து

வடிகட்டி விரலால் கரைத்துப் பிழிந்து கள்ளாக மீன் வறுவலை இளஞ்சூட்டுடன் தருவதாக அவரது விருந்தோம்பல் சொல்லப்படுகிறது. இவற்றையே இக்காலத்தில் சுண்டக்கஞ்சி சோறு என்கிறோம்.

**முடிவுரை:**

மனிதனுடைய இயற்கையான வாழிடம், பண்பாடு, சுற்றுச்சூழல் ஆகியவை நெய்தல் திணைப்பாடல்களில் இடம்பெறும் விதத்தைப் பார்ப்பதன் மூலமாக இருவேறுக் கருத்துக்களை நம்மால் புரிந்துக் கொள்ள முடிகிறது. ஒன்று புலவர்கள் தம்முடைய பாடல்களில் படைக்கும் கருத்துலகில், நெய்தல் நிலத்திற்குரிய பண்பாட்டு சூழலியல் கருத்துக்களையும், மற்றொன்று "ஆழி சூழ் உலகு" எனும் நாவல் மூலம் ஜே.டி.குரூஸ் பரதவர் வாழ்வியலையும் ஒருங்கிணைத்த கூறுகளின் வாயிலாக சங்க இலக்கியத்திற்கும், சாமான்ய மக்களுக்கும் இயற்கை அன்னையின் மீது அன்புக்காட்டியும், தியாக உணர்வுடன் பண்பாட்டு சூழலையும் காத்து வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் ஆ.புஷ்பா சாந்தி எட்டுத்தொகையும் பண்பாட்டுச் சூழலியலும் - காவ்யா பதிப்பகம் சென்னை 600 024
2. இரா.இராகவையங்கார் (உ.ஆ) - பத்துப்பாட்டு (மூலமும் உரையும்) -ஸ்ரீ செண்பகா பதிப்பகம் சென்னை 600 024 பதிப்பு 2021
3. முனைவர் தேவிரா (இராசேந்திரன்) தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் ஸ்ரீ நந்தினிப் பதிப்பகம் சென்னை 600 101 இறுதிப் பதிப்பு 2018
4. முனைவர்.பாக்யமேரி வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு -பூவேந்தன் பதிப்பகம் சென்னை 600 004 பதிப்பு 2019
5. புலியுர் கேசிகன் - எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஸ்ரீ செண்பகா பதிப்பகம் - சென்னை - பதிப்பு 2021
6. ஆர்.என்.ஜோ.டி.குரூஸ் ஆழி சூழ் உலகு காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., - நாகர்கோவில் 629 001 இரண்டாம் பதிப்பு - நவம்பர் 2022.
7. ப.அ.தாயம்மாள், சங்க இலக்கியத்தில் மூடநம்பிக்கை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இரண்டாவது கருத்தரங்குக் சுட்டுரை, திருச்சி, சூன் 1970.

**REFERENCES:**


1. Dr. A. Pushpa Shanthi, *Ettuthogaiyum Panpaattu Suzhaliyalum (Ettuthogai and Cultural Ecology)*. Kavya Pathippagam, Chennai 600 024.
2. R. Ragavaiyangar (Ed.), *Pathuppattu (Text and Commentary)*. Sri Senpaka Pathippagam, Chennai 600 024, 2021 Edition.

3. Dr. Devira (Rajendran), *Tamil Ilakkiya Thagaval Kalanjiyam (Encyclopedia of Tamil Literature)*. Sri Nandhini Pathippagam, Chennai 600 101, Final Edition 2018.
4. Dr. Bhagyameri, *Vagaimai Nokkil Tamil Ilakkiya Varalaru (History of Tamil Literature from a Genre Perspective)*. Poovendhan Pathippagam, Chennai 600 004, 2019 Edition.
5. Puliyur Kesikan, *Ettuthogaiyum Pathuppattum (Ettuthogai and Pathuppattu)*. Sri Senpaka Pathippagam, Chennai, 2021 Edition.
6. R.N. Joe D'Cruz, *Aazhi Soozh Ulagu (The World Surrounded by the Ocean)*. Kalachuvadu Publications (P) Ltd., Nagercoil 629 001, Second Edition - November 2022.
7. P.A. Thayammal, "Sangam Ilakkiyathil Moodanambikkai (Superstition in Sangam Literature)," *Paper presented at the Second Seminar of the Association of Tamil Professors of Indian Universities*, Trichy, June 1970.


**Copyright (c) Author**
**Creative Commons License This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**